**செ.வெ.எண்: 140** **நாள்: 05.03.2025**

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் பெறும் AAY மற்றும் PHH குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து பயனாளிகளும் தங்கள் கைவிரல் ரேகை பதிவினை e-KYC (electronic - Know Your Customer) சம்மந்தப்பட்ட நியாயவிலைக் கடையில் பதிவு செய்திட சென்னை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி AAY மற்றும் PHH பயனாளிகளின் குடும்ப அட்டைகளில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அத்தியாவசிய பொருட்கள் பெறும் நியாயவிலைக் கடைகளில் கைவிரல் ரேகையினை பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai    PRO PDKT    @PRO_Pudukkottai    Pro.Pudukkottai